**4வது சிறுவழக்குகள் நீதிமன்றம், சென்னை- 600 104.**

நாள். 10.06.2026
எம்.சி.ஓ.பி எண்.521/2023
எ.ம.சா.1
பெயர்.Ramesh
க/பெ.திரு.தங்க முத்து
வயது.49

**முதல் விசாரணை**

நான் இந்த மனுவில் என்னுடைய முதல் விசாரணை சாட்சியத்திற்காக சத்தியபிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்கிறேன். எ.ம.சா.ஆ 1 வரை ஆவணங்கள் குறியீடு செய்யப்படுகிறது.

**மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

இந்த வழக்கு சம்பந்தமான முதல் தகவல் அறிக்கை என் மீது தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். இந்த நீதிமன்றத்தை தவிர வேறு நீதிமன்றத்தில் சாட்சியம் அளிக்கவில்லை. நான் ஓட்டி சென்ற பேருந்தின் தடம் எண் 58 V பக்கவாட்டு எண் MVI-1345 விபத்து அன்று கோயம்பேட்டில் இருந்து செங்குன்றம் சென்று கொண்டிருந்தேன். பிராமாண வாக்கு மூலத்தில் நான் ஓட்டி சென்ற பேருந்திற்கு முன்பு ஒரு பேருந்து break down சாலையில் நின்று கொண்டிருந்ததாக சொல்லியுள்ளீரகள். மேற்படி விவரம் முதல் தகவல் அறிக்கை மற்றும் எதிருரையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. பிராமண வாக்குமூலத்தில் இருசக்கர வாகனம் பின்னால் வந்து மோதியதாக சொல்லியுள்ளீர்கள் ஆனால் முதல் தகவல் அறிக்கையில் முன்னால் சென்ற இருசக்கர வாகனத்தின்மீது மோதியதாக உள்ளதாக என்று சொன்னால் சரியல்ல. இருசக்கர வாகன ஓட்டிதான் அலைபேசியை பேசிக்கொண்டு சாலையை கவனிக்காமல் பேருந்து மீது மோதி விபத்தை ஏற்படுத்தி கொண்டார். விபத்திற்கு இருசக்கர வாகன ஓட்டி தான் காரணம். நான் சொல்வது தவறு என்றால் என்னுடைய கவனக்குறைவாலும் அஜாக்கரதையாலும் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

x

சாட்சி சொல்ல சொல்ல கணிப்பொறியில் பதிவு செய்யப்பட்டு வாசித்துக் காண்பித்து அவர் சரி என்று ஒப்புக் கொண்ட பின்பு அவருடைய கையொப்பம் பெறப்பட்டது.

ARUNDHADHI MAGESH

Digitally signed by ARUNDHADHI MAGESH
Date: 2026.06.10 15:34:46 +0530